**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.162/2018</u>**

பெயர்-திரு.சாந்தமல்லப்பா நாள்.08.07.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வா.சா.ஆ.5 எனது மகன் ரமேஷா எனக்கு எழுதி கொடுத்த பவர் பத்திரம் ஆகும். 04.05.2022ம் தேதி வா.சா.ஆ.5 எழுதப்பட்டது என்றால் சரிதான். எனது மகனுக்காக வழக்கு நடத்துவதற்காக வா.சா.ஆ.5 எனக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை 25.09.2018ல் தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போது பவர் பத்திரம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக வா.சா.ஆ.5 வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு என்னை பிரதிவாதிகள் இடையூறு செய்யகூடாது என்று தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. வழக்கு தாக்கல் செய்த போது எனக்கு தாவா சொத்தில் உரிமை, பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மீது பொய்யாக ஆவணங்கள் தயார் செய்து வழக்கு போடுவதே வாடிக்கையாக கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கானது வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பவர் பத்திரத்தில் எனது மனைவி மாதுளாம்பிகா மற்றும் எனது மனைவியின் தங்கை கணவர் சிவண்ணா சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். எனது வழக்கறிஞரும் பத்திர அலுவலகம் வந்து ஆவணம் தயார் செய்து கொடுத்தார். பத்திர அலுவலகத்திற்கு வேறு யாரும் வந்தார்களா? என்றால் இல்லை.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கானது ஒத்தி வைக்கப்படுகிறது</u>**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.07.08 12:51:06 +0530

District Munsif